Available online at: http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
IJMASRI, Vol. 3, issue 1, pp. 539 -545
https://doi.org/10.53633/ijmasri

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)

ISSN: 2582-9130 IBI IMPACT FACTOR 1.5 DOI: 10.53633/IJMASRI

RESEARCH ARTICLE

# கிராமம் சிவலோகநாதர் கோயில் கல்வெட்டு செய்திகள் - ஓர் ஆய்வு

**முனைவர் க.வீரா**

கௌரவ விரிவுரையாளர்(PTA), வரலாற்றுத்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம் - 605 602.

***ஆய்வுச் சுருக்கம்***

தமிழகக் கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி தமிழகத்தின் வரலாறு, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் எழில்மிக்கப் பெட்டகங்களாகவும் விளங்குகின்றன. சமய உணர்வும், அறநெறிப் பண்புகளும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கி அதன் நடுநாயகமாக நின்று இயக்கி வருபவை கோயில்கள் ஆகும். அந்தந்த வட்டாரத்து, வரலாற்றுச் சிறப்புகள், சமய வழிப்பாட்டு முறைகள், சமூகப் பொருளாதார வாழ்க்கை பற்றி செய்திகளைக் கல்வெட்டு வடிவில் பதிவு செய்து தன்னகத்தே வைத்துக்கொண்டு ஒரு திறந்தவெளி ஆவணக் காப்பகமாக தமிழகக் கோயில்கள் விளங்குகின்றன.

இவ்வாறு பண்டையக் கால சமய, பண்பாட்டு வரலாற்று மையங்களாக இருந்த பல கோயில்களில், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வருவாய் வட்டத்தில் உள்ள கிராமம் என்ற ஊரில் அமைந்துள்ள ஸ்ரீசிவலோக நாதர் திருக்கோயிலும் ஒன்றாகும். கிராமம் என்ற இவ்வூரின் பெயர் இடைக்காலத்தில் ‘‘திருமுண்டீச்சரம்’’ என்றும் அழைக்கப்பட்டு தற்போது மீண்டும் பழைய பெயரில் இவ்வூர் அழைக்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் பல சிவ ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் முற்கால சோழமரபில் கட்டப் பெற்று எண்ணிக்கையில் அதிக கல்வெட்டுக்களைக் கொண்டுள்ள கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாகும். கலை சிறப்பு மிக்க இக்கோயிலில் பல்வேறு மன்னர்களுடைய முப்பத்தியோரு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளின் சிறப்புகளையும் அதன் வரலாற்று செய்திகளையும் இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

**குறிச்சொற்கள்**

கோயில்கள், கல்வெட்டு, கிராமம், நுண்கலை, சமயம், பண்பாடு, வரலாறு.

## முன்னுரை

விழுப்புரம் மாவட்டத்தில் பல சிவ ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் முற்கால சோழமரபில் கட்டப் பெற்று எண்ணிக்கையில் அதிக கல்வெட்டுக்களைக் கொண்டுள்ள கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாகும். கலை சிறப்பு மிக்க இக்கோயிலில் பல்வேறு மன்னர்களுடைய முப்பத்தியோரு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.



©2023 by KRISHMA PUBLICATION

இங்குள்ள கல்வெட்டுகள் சோழர், போசளர், பாண்டியன் மற்றும் விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகள் இங்கு பதிவாகியுள்ளது. இவற்றின் மூலம் இப்பகுதியின் அரசியல், சமய, சமூகப் பொருளாதார வரலாற்றை அறியமுடிகிறது. இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகள் மூலம் கிடைக்கக் கூடிய புராண கதைகள் இலக்கியம் சிற்பக்கலை கொண்டு இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் கல்வெட்டுச் செய்திகளை வெளிக்கொணர்வதும் அதன் வழி தமிழகத்தின் பொதுவான வரலாற்றை மேலும் செறிவுள்ளதாக ஆக்குவதும் இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். எனவே இவ்வாய்வின் நோக்கம் கிடைக்கக்கூடிய சான்றுகளின் அடிப்படையில் இக்கோயிலின் கல்வெட்டுச் செய்திகளின் வாயிலாக இப்பகுதியின் வரலாற்றையும் தமிழக வரலாற்றுடன் வைத்து பார்ப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் முப்பத்தொன்று கல்வெட்டுகளில் பதினான்கு கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தவை. அவன் காலத்திற்குப் பிறகு போசாளர் நாட்டு கன்னரதேவன் மூன்று கல்வெட்டுகளாகவும் இரண்டாம் ஆதித்தனின் ஒரு கல்வெட்டும், முதலாம் ராஜேந்திரனின் ஒரு கல்வெட்டும், இரண்டாம் இராஜேந்திரனின் இரண்டு கல்வெட்டும், முதலாம் குலோத்துங்கனின் இரண்டு கல்வெட்டும், மூன்றாம் குலோத்துங்கனின் ஒரு கல்வெட்டும் இங்கு காணப்பெறுகிறது.

**வரலாற்றில் திருமுண்டீச்சரம்**

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ள கிராமம் என்ற ஊர் பற்றியும் இப்பகுதி சார்ந்த ஊர்களின் வரலாறு பற்றியும் அறிவதற்கு பழங்கால சின்னங்கள், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள் ஆகியவற்றுடன் இவ்வூரில் உள்ள சிவலோக நாத சுவாமி கோயிலிலிருந்து கிடைக்கும், கல்வெட்டுகளும் மட்டுமின்றி கூடுதலாக இவ்வூரைச் சுற்றியுள்ள வரலாற்று சிறப்புடைய ஊர்களில் இருந்து கிடைக்கும் கல்வெட்டுகளும், மற்றும் ஆங்கிலேய ஆவணங்களைக் கொண்டும் இக்கட்டுரை அமைந்துள்ளது. இவ்வூரின் பழமையான பெயர்களாக அறியப்படுவது திருமுண்டீச்சரம், மௌலி கிராமம், திருமுடி கிராமம் மற்றும் பராந்த சதுர்வேதி மங்கலம். இப்பெயர்கள் புராணத்தின் வழியாகவும் கல்வெட்டுகளின் வழியாகவும் அறியமுடிகிறது.

**ஊர் பெயர் காரணம்**

(i) கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டு - கி.பி. 935 – 36

செவி வழி செய்திகளால் இவ்வூரின் பெயர் மௌலி என்று குறிப்பிடப்படுகிறது. அதற்கு திருமுடி எனப்பெயர். ஒரு காலத்தில் பசுவின் கொம்பால் இடரி இவ்வூரில் கிடைத்த லிங்கம் அதன் தலைப்பகுதி தெரிந்ததால் இதற்கு மௌலி கிராமம் எனப் பெயர்பெற்றது எனவும் மற்றும் வரலாற்று காலத்தில் சோழமன்னர்கள் கல்வெட்டுகளால் இக்கிராமம் திருமுடி கிராமம் என்றும் அழைக்கப் பெற்றுள்ளது. முதலாம் பராந்தகனின் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்துகிறது. இப்பெயரும் புராணகால பெயரை ஒட்டிய தமிழ் பெயராக இது அமைந்திருக்கிறது. பிற்காலத்தில் இரண்டாம் ராஜேந்திரனின் ஆட்சி காலத்தில் இவ்வூர் அதனைச் சுற்றி உள்ள பகுதியை ஒன்றிணைத்து பிராமணர்க்கு பராந்தகனின் நினைவாக கொடை அளித்தமையால் இவ்வூருக்கு "பராந்தக சதுர்வேதி மங்கலம்" எனப் பெயர் பெற்றது. சதுர்வேதி மங்கலம் என்பது கற்றறிந்த பிராமணர்க்கு கோயிலை மையமாக வைத்து தானமாக வழங்கப்படும் கிராமம் ஆகும். பிற்காலத்தில் இதில் இருக்கும் திருமுடி தவிர்க்கப்பட்டு மாவட்ட கணக்குகளில் கிராமம் என்ற ஊர் பெயரே நிலைத்து நிற்கிறது. இத்தோடு இவ்வூருக்கு ஆற்றுதளி என்ற ஒன்றும் இருக்கிறது. ஆற்றின் அருகே அமைந்திருந்தால் ஆற்றுதளியூர் கிராமம் எனவும் பெயர் இருந்திருக்கிறது. இங்ஙனம் புராணக்காலம் முதல் இன்றைய நாள் வரை ஊரின் பெயர் மாற்றம் பெற்று இன்று வழக்கில் உள்ள பெயரே (திருமுண்டீச்சரம்) நிலைத்திருக்கிறது.

**கிராமம் கோயில் கல்வெட்டு செய்திகளும் மற்றும் அப்பகுதி சார்ந்த தொன்மைகளும்**

திருமுண்டீச்சரம் (கிராமம்) என்னும் இவ்வூரில் நான்கு பண்பாட்டுக் காலங்களில் மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. முதல் பண்பாட்டுக் காலமாகவும் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை இரண்டாவது பண்பாட்டுக்காலம் பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதிமூன்றாம் நூற்றாண்டுவரை மூன்றாவது பண்பாட்டுக்காலம் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை நான்காவது பண்பாட்டுக்காலம் பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஆகும். இவ்வூரின் தொன்மையையும் அருகில் அமைந்த ஊர்களின் வரலாற்றையும் இங்கு காணலாம்.

சோழர்கால கல்வெட்டுக்கள் அதிக அளவில் இக்கோவிலில் காணப்படுகின்றன. குறிப்பாக **முதலாம் பராந்தகனின்** 12 கல்வெட்டுகள் இருப்பது சிறப்பம்சமாகும். அவை பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை தெற்குசுவர் |
| | செய்தி | - | இளவரசர் இராசாதித்த தேவர் தனி சேவகர்களில் ஒருவனான காரிபிரமன் நந்தா விளக்கு ஒன்றை கோவிலுக்கு நன்கொடையாக கொடுத்தான். |
| (ii) | பொ.ஆ. | - | கி.பி. 935 – 936 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை தெற்குசுவர் |
| | செய்தி | - | சோமடி என்பவன் ஆதனூர் பட்டர்கள் வசம் நந்தா விளக்கெரிக்க பொன் அளித்ததை பதிவு செய்கிறது. |
| (iii) | பொ.ஆ. | - | கி.பி. 947 – 48 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | மங்கல நாட்டு மங்கலத்து வடசேரியுடையன் கூற்ற மங்கலங்கிழான் மாதேவன் என்பவனிடம் நந்தா விளக்கை எரிக்க ஆடுகளை கொடுத்ததை குறிக்கிறது. இக்கல்வெட்டில் மூன்றாவது வரியில் சிறிது எழுத்து தொடர்பின்மை காணப்படுகிறது. |
| (iv) | பொ.ஆ. | - | கி.பி. 941 – 42 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | மழநாட்டு பிரமபுரிநல்லூர் கண்டத்து பிரமபுரி நல்லூர் கோவடி உடையான் கோயில், இரண்டு நந்தா விளக்குகள் எரிக்க கீழான்மூர் நாட்டு பொய்யரைசூர் ஊராரிடம் தனித்தனியான நான்கு நிலங்களாக மொத்தம் நிலம் பத்தினை வாங்கி கொடையளித்ததை குறிக்கிறது. |
| (v) | பொ.ஆ. | - | கி.பி. 918 – 19 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | இளவரசர் இராஜாதித்த தேவர், உண்ணாழிகை புறமாக தேவதானமாக்கிய ஆதனூர் தேவதானத்திற்கு உட்பட்ட புரவரிநல்லூரில் பெறும் 125 கலம் நெல்லினையும் பொன்னினையும் அளித்ததை குறிப்பிடுகிறது. |
| (vi) | பொ.ஆ. | - | கி.பி. 937 – 38 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | இளவரசர் இராஜாதித்த தேவரின் படையில் பணிபுரியும் ஒருவர் (பெயர் கல்வெட்டில் சிதைந்துள்ளது) செப்பு, வெண்கலத்தாலான இரண்டு தளிகை கலன்களையும், அவற்றை வைப்பதற்குரிய அட்டணைக்கால் ஒன்றினையும் ஆறீவத்தளி மூலத்தானத்து பெருமானடிகளுக்கு அளித்ததை தெரிவிக்கிறது. |
| (vii) | பொ.ஆ. | - | கி.பி. 945 – 46 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை வடக்குசுவர் |
| | செய்தி | - | இளவரசர் இராஜாதித்தரின் பெரும்படையை சேர்ந்தவரால் செய்யப்பட்ட கொடையாக தெரிகிறது. கல்வெட்டு முற்றுபெறாமல் இருக்கிறது. |
| (viii) | பொ.ஆ. | - | கி.பி. 920 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | அவியனூர் சபையார்கள் இருவேறு நிலங்களை 50 மற்றும் 3 |

கழஞ்சுகளுக்கு ஆற்றுத்தளி பெருமானடிகளுக்கு விற்று விலை ஆவணம் செய்து கொடுத்ததை குறிக்கிறது.

(ix) பொ.ஆ. - கி.பி. 929
மொழி - தமிழ்
இடம் - கருவறை தென்சுவர்
செய்தி - ஆற்றுத்தளி மூலத்தானத்து மகாதேவருக்கு திருமுனைப்பாடி நாட்டு நாட்டார் நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு சாவா மூவாப் பேராடு 90 கொடுத்ததை குறிக்கிறது.

(x) பொ.ஆ. - கி.பி.925
மொழி - தமிழ்
இடம் - கருவறை மேற்குசுவர்
செய்தி - இளவரசர் இராசாதித்த தேவரின் பெரும்படை நாயகனான மலைநாட்டு நந்திக்கரை புத்தூரை சேர்ந்த வெள்ளங்குமரன் என்பான் நந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்கு நூறு சாவா மூவா பேராடுகளை கொடுத்ததை குறிப்பிடுகிறது.

(xi) பொ.ஆ. - கி.பி. 925
மொழி - தமிழ்
இடம் - கருவறை தென்சுவர்
செய்தி - இளவரசர் ராசாதித்த தேவரின் அரண்மனை பணி செய்யும் மக்கள் விளக்கொன்று எரிப்பதற்காக கொடுத்த பத்து கழஞ்சு பொன்னை முதலாக பெற்றுக்கொண்டு முடியூர் நாட்டு குசப்பாடி ஊரவர்கள் அதன் வட்டியிலிருந்து நாள்தோறும் உழக்கு நெய் அளிக்க ஒத்துக் கொண்டதை குறிக்கிறது.

(xii) பொ.ஆ. - கி.பி. 943
மொழி - சமஸ்கிருதமும், தமிழும்
இடம் - கருவறை வடக்குசுவர்
செய்தி - துணிவும், போரில் வெல்ல இயலாத வீரமும் கொண்டவனும், ராஜாதித்தனின் படைத்தலைவனும் கேரள மாமனிதனுமான புத்தூரை சேர்ந்த வெள்ளங்குமரன் என்பான் பெண்ணை கரையிலமைந்த மௌலி கிராமத்தில் கற்றளியாக இக்கோயிலை எடுப்பித்தான் என்று முன்பகுதியிலுள்ள சமஸ்கிருத பகுதி பதிவு செய்ய, பின்வரும் தமிழ் பகுதியும் அதனையே கூறுகிறது.

மற்றொரு சோழ மன்னனான **முதலாம் குலோத்துங்கனின்** நான்கு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஆவையாவன

(i) பொ.ஆ. - 12ம் நூற்றாண்டு
மொழி - தமிழ்
இடம் - கருவறை மேற்குசுவர்
செய்தி - மங்கள நாட்டு சாளுர் குடிபள்ளி பெரியாற் கணபதி, ஏனாதி மங்கலத்து ஆமாந்தூர் என்பவனை வேட்டையின்போது தவறுதலாக கோலால் கொன்றுவிட்டமைக்கு கழுவாயாக ஆற்றுத்தளி மகாதேவர் கோயிலில் முக்கால் நந்தா விளக்கெரிக்க வகை செய்ததை குறிக்கிறது.

(ii) பொ.ஆ. - 12, 13ம் நூற்றாண்டுகள்
மொழி - தமிழ்
இடம் - கருவறை வடக்குசுவர்
செய்தி - பராந்தக சதுர்வேதிமங்கலத்து குடிபள்ளி மாதானி குளத்தூரணை, ஐயங்கொண்ட சோழ மண்டலத்து காலியூர் கோட்டத்து செவலைமேட்டை சேர்ந்த குடிபள்ளி தவறுதலாக கொன்றமைக்கு கழுவாயாக ஆற்றுத்தளி மகாதேவர் கோயிலில் எரிய வைத்த முக்கால்

விளக்கு எரிப்பதற்கான முதலீடாக சாவா மூவாப் பேராடு 72-னை பெற்றுக்கொண்டு செல்வன் பள்ளி கொண்டானான பேரனையானை பொறுப்பாக அமர்த்தியதைப் பற்றி கூறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | பொ.ஆ. | - | 11 - 12ம் நூற்றாண்டு |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்கு, தெற்கு சுவர் |
| | செய்தி | - | கிளியூர் மலையமான் மலையன் பெரிய உடையாள் ஆன எதிரிலி சோழ வாணகுலராயன், மரக்கலன்பாடியில் தான் கொள்ளும் வரிகளை திருவீராபீசுவரம் உடையாளுக்கு அளித்தை தெரிவிக்கிறது. |
| (iv) | பொ.ஆ. | - | கி.பி.1074 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை வடக்குசுவர் |
| | செய்தி | - | பராந்தக சதுர்வேதி மங்கலத்து சபையார் தம்பில் ஒருவனான பூவனுக்கு பராந்தக பேரரையன் என்று பேர் கொடுத்துள்ளனர். அப்போது பராந்தக பேரரையனிடம் இருபது கார்கள் பெற்றுக் கொண்டு அரைவேலி நிலத்தினை விற்றுக் கொடுத்ததையும், அந்நிலத்திற்குரிய வரிகளை சபையார் செலுத்த ஒப்புக் கொண்டதையும் குறிக்கிறது. |

**இரண்டாம் ராஜேந்திரனது** காலத்து இரண்டு கல்வெட்டுக்களும் இக்கோவிலில் காணப்படுகின்றன. அவையாவன

| | | | |
|---|---|---|---|
| (i) | பொ.ஆ. | - | 1061 - 62 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | குடிபள்ளி பெற்றான் சோமனுக்காக, குடிபள்ளி பெற்றான் உத்தமன் ஆற்றுத்தளி மகாதேவர் கோயிலில் அரை நந்தா விளக்கு எரித்ததை குறிக்கிறது. |
| (ii) | பொ.ஆ. | - | 1055 - 56 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை வடக்கு சுவர் |
| | செய்தி | - | மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி இறைவனின் பெயர் குறிப்பிடும் பகுதியுடன் நின்றுவிட்டது. பெரிதும் சிதைந்துள்ளது. குசப்பாடி ஊரவர்கள் இறையிலி தேவதானமாக நிலம் விற்று கொடுப்பதை குறிக்கிறது. |

சோழமன்னன் **பரகேசிரிவர்மனின்** ஒரு கல்வெட்டும் இக்கோயிலில் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (i) | பொ.ஆ. | - | 10ம் நூற்றாண்டு |
| | மொழி | - | எழுத்து |
| | இடம் | - | கருவறை தென்சுவர் |
| | செய்தி | - | நந்தாவிளக்கெரிக்க கீழான்மூர் நாட்டு பெருந்தாழன் என்பவன் நிலக் கொடையளித்ததை குறிக்கிறது. |

சோழ மன்னர்களாகிய **இரண்டாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், ராஜ மகேந்திரன், ஆதித்த கரிகாலன், ராஜாதித்தன்** ஆகிய அரசர்களின் கல்வெட்டுக்கள் தலா ஒன்று காணப்படுகிறது. அவை பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| (i) | மன்னன் | - | **இரண்டாம் ராஜராஜன்** |
| | பொ.ஆ. | - | 1149 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை தெற்குசுவர் |
| | செய்தி | - | மோகன் ஆளப்பிறந்தான் அனபாய காடவராயன், தாம் பெற்று வந்த பெரும்பாடி காவல் வருவாயினை திருஆற்றுத் தனியுடைய நாயனார்க்கு அளித்ததை பதிவு செய்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மன்னன் | - | **முதலாம் ராஜேந்திரன்** |
| | பொ.ஆ. | - | 1027 - 28 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை வடக்குசுவர் |
| | செய்தி | - | முதலாம் ராஜேந்திரனின் மெய்கீர்த்தி மட்டுமே உள்ளது. பொருள் பாதியளவு தெளிவாக இல்லை. |
| (iii) | மன்னன் | - | **ராச மகேந்திரன்** |
| | பொ.ஆ. | - | 1062 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை மேற்குசுவர் |
| | செய்தி | - | இவ்வூர் குடிபள்ளி திருமாரன் திருவரங்கன் மகள் சோமக்கா செய்த ஏதோவொரு செயலை குறிப்பதாக தெரிகிறது. |
| (iv) | மன்னன் | - | **ஆதித்த கரிகாலன்** |
| | பொ.ஆ. | - | கி.பி. 964 |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கருவறை வடக்குசுவர் |
| | செய்தி | - | திகை விளகன் ஆன சிவதேவக பேரரையன் என்பான் ஒரு நந்தா விளக்கெரிப்பதற்காக 90 சாவா மூவா பேராடுகளை கொடுப்பதை கூறுகிறது. |
| (v) | மன்னன் | - | **ராஜாதித்தன்** |
| | பொ.ஆ. | - | கி.பி.12, 13ம் நூற்றாண்டு |
| | மொழி | - | தமிழ் |
| | இடம் | - | கோவில் வெளிப்பகுதி |
| | செய்தி | - | துண்டு கல்வெட்டுகள், முதல் துண்டு பாடல் வடிவில் அமைந்துள்ளது. இரண்டாம் துண்டு பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது. |

இக்கோவிலில் பாண்டிய மன்னனான **சடாவர்மன் சுந்தர பாண்டியனின்** மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| (i) | பொ.ஆ. | - | 1265 - 66 |
| | மொழி | - | சமஸ்கிருதமும், தமிழும் |
| | இடம் | - | அம்மன் சன்னதியின் மேற்கு தெற்குசுவர் |
| | செய்தி | - | சுந்தரபாண்டியனின் கீழறுத்த விக்கிரம பாண்டிய வாணாதராயன் தான் பெறும் வரிகளை இக்கோயில் தானாத்தாரிடம், வீரபாண்டிய தேவர் நிறுவிய சுந்தர பாண்டியன் சந்திக்கும், திருநாள் செலவுகளுக்குமாக கொடுத்ததை குறிப்பிடுகிறது. |
| (ii) | பொ.ஆ. | - | 1268 - 69 |
| | மொழி | - | சமஸ்கிருதம், தமிழ் |
| | இடம் | - | அம்மன் சன்னதி தெற்குசுவர் |
| | செய்தி | - | அரசன் தன் பெயரால் நிறுவிய சுந்தரபாண்டியன் திருநாள் செலவுகளுக்கும் அன்று இறைவன் எழுந்தருளுவதற்கு திருத்தோப்பு உண்டாக்கவும் மற்றும் பூசை திருப்பணிக்காகவும், தனித்தனியாக இரு இனங்களில் கொடுத்த இரண்டேகால் நிலத்தினை பெற்றுக் கொண்டதாக இருக்கிறது. |
| (iii) | பொ.ஆ. | - | 1269 - 70 |
| | மொழி | - | சமஸ்கிருதம், தமிழ் |
| | இடம் | - | அம்மன் சன்னதி வடக்கு மேற்குசுவர்கள் |
| | செய்தி | - | பொக்கணங் கொடுத்தருளிய நாயனார் கோவில் தானத்தாருக்கு |

அரசன் அனுப்பிய ஓலையே இது. ஒரு வேளானின் பொறுப்பில் நாள்தோறும் நூறு மாலைகளுக்காக 1200 பூக்களை அளிக்க வேண்டும் எனவும் அவனது வாழ்க்கை செலவுக்காக ஒரு வேலி நிலம் அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கிறது.

இராட்டிரகூட அரசனின் **மூன்றாம் கிருஷ்ணனின் (கன்னர தேவன்)** மூன்று கல்வெட்டுகள் இந்த கோயிலில் காணப்படுகின்றன. அவையாவன

(i) பொ.ஆ. - கி.பி.964
மொழி - தமிழ்
இடம் - கருவறை தென்சுவர்
செய்தி - வைதும்ப மாராயன் திருவையன் ஸ்ரீகண்டன், ஆற்றுத்தளிப் பெருமானுக்கு வெள்ளி தளிரியொன்று கொடுத்ததை பதிவு செய்கிறது.

(ii) பொ.ஆ. - கி.பி.959
மொழி - தமிழ்
இடம் - கருவறை மேற்குசுவர்
செய்தி - சேமணக்கூரை சேர்ந்த முனை சதுராமணி பேரரையன் என்பார் ஈழ விளக்கு ஒன்றினையும் அதனை எரிக்க 32 சாவா மூவாப் பேராடுகளையும் கொடுத்ததை குறிக்கிறது.

(iii) பொ.ஆ. - கி.பி.964
மொழி - தமிழ்
இடம் - கருவறை தென்சுவர்
செய்தி - மீபுலிக்காவுடைய பாயன்மானியென்பான் தன் பாட்டனார் சத்தி ஆளவையை

இதுபோக விஜயநகர மன்னரான **வீரவிருப்பண உடையார்** அவர்களின் ஒரு கல்வெட்டும் முன் மண்டப கிழக்கு சுவரில் காணப்படுகிறது. கி.பி.1395ம் ஆண்டைச் சார்ந்த இந்த கல்வெட்டில் தமிழில் பூஜை பணிகளுக்காக 16 இரேகை பொன் தேவைபட்டதால் அதனை சரிசெய்யும் நோக்கில் ஆண்டுதோறும் 10 பொன் கொடுத்ததாக கூறுகிறது.

**முடிவுரை**

தமிழகத்தில் காணப்படும் சோழர்கால கோயில்களில் குறிப்பிடத்தக்க ஒன்று திருமுண்டீச்சரம் சிவலோகநாதர் கோயிலாகும். திருமுண்டீச்சரம் பண்டைய காலம் முதல் ஆங்கிலேயர் ஆட்சி வரை நெடிய வரலாற்று பின்னனியை பெற்றுள்ளது. பிற்கால சோழர் காலத்தில் குறிப்பாக முதலாம் பராந்தகனின் காலத்தில் இக்கோயில் கற்றலியாக்கப்பட்டது என்பதை இக்கோயில் கல்வெட்டுகள் உறுதி செய்துள்ளனர். பிற்கால சோழர் கலைப்பாணியில் செல்வாம்பிகை கோயிலும் அதன் சிலையும் காணப்பெறுகிறது. இத்துடன் சூரியன், சந்திரன், பைரவர், அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய பிற்கால சிற்பங்களும் இக்கோயிலில் சிறப்பாக அமைந்துள்ளது.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், முற்கால சோழர் கலையும் சிற்பமும், தமிழ்நாடு வெளியீட்டுக் கழகம், சென்னை, மார்ச் 1966.
2. டி.வி.சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம், 1974.
3. தமிழ்நாட்டு வரலாறு, சோழ பெருவேந்தர் காலம், முதல் தொகுதி, தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடு, சென்னை, 1998.
4. சு.ராஜசேகரன், திருக்கோயில்களின் தொழில், சமுதாய உறவுகள், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.
5. அ.கிருஷ்ணசாமி, விஜயநகர பேரரசு வரலாறு, நர்மதா பதிப்பகம், சென்னை, 2005.
6. நாகசாமி, தமிழக கோயிற்கலைகள், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.
7. தமிழ்நாட்டு கல்வெட்டுக்கள், தொகுதி XIV, விழுப்புரம் மாவட்ட கல்வெட்டு தொகுதி – 1, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2021.


******